மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு மழை பொய்த்துவிட்டிருந்தபோதும்கூட, இயற்கை நமக்கு உறுதுணையாக இல்லாதிருந்த காலத்திலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2002-ல் எடுத்த கடுமையான முயற்சியால், புதிய வீராணம் திட்டத்தின்வாயிலாக, இன்றைக்கு ஒரு நாளைக்கு சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 831 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு 83 கோடி ரூபாய் செலவில் இந்தக் குடிதண்ணீரை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில இடங்களில் கழிவு நீர் கலப்பதாகக் கூறுகிறார். அப்படி இருப்பின், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே, இதுபோல் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் 180 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கீடு செய்து, விரைவாகச் செயல்படுத்த உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி ஒரு சில இடங்களில் லாரிகள்மூலம் குடிநீர் வழங்க வேண்டிய சூழ்நிலை வந்தால், லாரிகள்மூலம் வழங்கி, தூய்மையான குடிநீர் மக்களுக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

21—

அங்கன்வாடி மையம்

***4932—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, குறிஞ்சிகுளத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமத்தில் அங்கன்வாடி மையம் அரசு கட்டடத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. குறிஞ்சிகுளம் கிராமத்தில் உள்ள பயனாளிகள் விஜயாபதி அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். மேலும், இம்மையத்திற்கும், குறிஞ்சிகுளம் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ. என்பதால் மத்திய அரசு விதிகளின்படி, ஒரு கிலோ மீட்டருக்குள் இம்மையம் செயல்பட்டு வருவதாலும், மேலும் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் குறைந்தபட்ச மக்கள்தொகை 400 இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும், குறிஞ்சிகுளம் கிராமத்தில் மக்கள்தொகை வெறும் 209 மட்டுமே இருப்பதால், குறிஞ்சிகுளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான தேவை தற்போது ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.*

அடுத்து, வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

அரசு கலைக் கல்லூரி

***292—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—